// உண்மை நகல் //

135 57

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

நகராட்சிகள் கட்டணக்கழிப்பிடம் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடங்கள் – துறைமூலம் வசூலிப்பது/பொது ஏலத்தில் விடுவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசு ஆணை (டி) எண்.296 நாள்: 20.7.96

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.105946/90/ஜி.3 நாள்: 24.12.90
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித நே.மு.க.எண்.9169/96 ஜி.5 நாள்: 2.7.96

......

ஆணை:

பார்வை ஒன்றில் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதத்தில் நகராட்சிகளிலுள்ள கட்டணக் கழிப்பிடங்கள் சைக்கிள் ஸ்டாண்ட் போன்ற இனங்களை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட்டதில், குத்தகைதாரர்கள் நகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூல் செய்வதாகவும், இதனால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகிறார்கள் என்றும், பல புகார்கள் வரப்பெற்றதால் கட்டணக் கழிப்பிடங்கள் பொதுமக்களின் பயனுக்காக கட்டப்பட்டவை, வருமான நோக்கத்திற்காக அல்ல என்பதை கருத்திற்கொண்டு 1.4.91 முதல் கட்டணக் கழிப்பிடங்களிலும், சைக்கிள் ஸ்டாண்ட் நிலையங்களிலும் நகராட்சியால் நேரடியாக கட்டணம் வசூல் செய்ய அனைத்து நிர்வாக அதிகாரிகள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2. பார்வை இரண்டில் காணும் தமது நேர்முகக் கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், பெரும்பாலான நகராட்சிகள் துறை மூலம் வசூல் செய்யும் இந்த புதிய திட்டத்தினால் நகராட்சியின் வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்றும், கட்டணம் வசூலிக்கும் நபருக்கு தினக்கூலி, டிக்கெட் அச்சிட செலவு என்று கூடுதலாக செலவு செய்ய வேண்டியுள்ளது என்றும் ஒரு சில நகராட்சிகளில் மட்டும் இத்திட்டத்தினால் வருவாய் கூடியுள்ளது என்றும், கட்டணக் கழிப்பிடம் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடத்திற்கான கட்டணத் தொகையை முறையே வசூலிப்பதால் ஏற்படக்கூடிய வருமான இழப்பு, நிர்வாக பிரச்சனைகள் மற்றும் நுகர்வோர் நீதிமன்றங்கள் காணாமல் போகும் வாகனங்களுக்கு நகராட்சியின் மீது பொறுப்பு சுமத்தி, பெரும் தொகையை நஷ்டஈடாக கோருவது போன்ற காரணங்களால் ஏற்படும் பிரச்சனைகளை சரிசெய்ய பழைய முறைப்படி பொது ஏலத்தில் கீழ்க்கண்ட கூறுகளை கருத்தில் கொண்டு முடிவு செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

(அ) துறை மூலம் வசூலாகும் தொகையிலிருந்து நிர்வாக செலவுகள் அதாவது வசூலிப்பவர் கூலி, கிருமிநாசினி, தண்ணீர் மற்றும் சுத்தம் செய்தல் போன்றவற்றிற்கு ஆகும் செலவுகள் போக மீதமுள்ள தொகை

(ஆ) துறை மூலம் செய்யப்பட்ட வருமானம், இனிமேல் பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் வருமானம் மற்றும் நகராட்சியால் குத்தகைதாரர்கள் மீது விதிக்கப்படும் நிபந்தனைகள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விருப்பங்கள் (அ) அல்லது (ஆ) வருவாய் ஈட்டத்தக்க அளவிலும் மற்றும் செயல்முறைகளிலும் நகராட்சிக்கு சாதகமாக அமையுமானால் நகரிய குழு அதற்கு ஏற்றவாறு தேர்வு செய்து துறை மூலமாக அல்லது பொது ஏலம் வழியாகவோ கட்டணம் வசூல் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, நகராட்சி கட்டணக்கழிப்பிடம் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடங்களை பொது ஏலத்தில் விடவும் ஏலத்தில் கிடைக்கப்பெறும் தொகை முந்தைய வருமானத்தை விட (அதாவது ஏற்கனவே துறையால் வசூலிக்கப்பட்டதை விட) குறைவாக இருந்தால், துறை மூலமாகவே தொடர்ந்து நடத்தவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/எல். மாலதி,
அரசு செயலர்.

/உண்மை நகல்/

மேலாளருக்காக.